★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 17 சனிக்கிழமை (03 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 07

# பேச்சுவார்த்தைக்குரிய அம்சங்களை அரசு அடுத்த வாரத்தில் வெளியிடும்?

## படையினர் கெடுபிடி

மட்டக்களப்பில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள இடங்களில் உள்ள வீதிகளில் மக்கள் பயணம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக அவசரமாக அழைத்துச் செல்லப்படுபவர்களும் கூட இராணுவ முகாம்கள் அமைந்துள்ள வீதிகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-4)

## பிரதிநிதிகள் குறித்து இன்னும் தீர்க்கமான முடிவு எதுவும் இல்லை

கொழும்பு, டிசம்பர் 3

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இம்மாதம் நடைபெற இருக்கும் இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களின் போது ஆராயப்பட இருக்கும் அம்சங்கள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகள் குறித்து தீர்க்கமான முடிவு எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தர்ம சிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது—

இரண்டாம் கட்டப் பேச்சில் என்னென்ன விசயங்கள் ஆராயப்படும் என்று மேலெழுந்த வாரியாக குறித்துரைக்கப்பட்டது

எனினும் புதிய அம்சங்களையும் சேர்க்க அரசு விரும்புவதாகவும்—

அவை குறித்து அடுத்த வாரமளவில் வெளியிடப்படும் என்றும் — அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்கா நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை இரண்டாம் கட்டப் பேச்சில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் குறித்து இன்னும் தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை.

முன்னர் தூதுக்குழுவுக்குத் தலைமை வகித்த திரு. பால பட்டபெண்டி ஜனாதிபதியின் செயலாளராகி விட்டதால் அவரது இடத்துக்கு யாரை நியமிப்பது என்பதிலும் —

முஸ்லிம் பிரதிநிதி ஒருவரை சேர்த்துக்கொள்வது குறித்தும் — பலத்த கருத்து வேற்றுமைகள் நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

எனினும் ஜனாதிபதி தமது நம்பிக்கைக்கு உரியவர்களையே நியமிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய சிக்கல்கள் பல இருந்த போதிலும் நத்தார் தினத்துக்கு முன்னர் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்

## கிழக்கு மக்களுக்கு சந்திரிகா அனுதாபம்

### ரூ.50 லட்சம் நிவாரண உதவி

கொழும்பு, டிச. 3

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ ஜனாதிபதி நிதியில் இருந்து 50 லட்சம் ரூபாவை அவர் வழங்கியுள்ளார். (இ-எ-ஐ-6)

## படை அதிகாரிகளுடன் சிப்பாய்கள் கைகலப்பு!

### இருவருக்குப் படுகாயம்!!

கொழும்பு, டிச. 3

கலவெல என்னுமிடத்தில் தெவஹூவா இராணுவ முகாமில் மூன்று சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து 2 சிப்பாய்கள் மோசமாகத் தாக்கப்பட்டனர் என்றும் —

அந்த சிப்பாய்கள் இருவரும் கலவெல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து, இம்முகாமில் நிலை கொண்டுள்ள எட்டாவது சுஜபா ரெஜிமெண்டைச் சேர்ந்த 100க்கு அதிகமான சிப்பாய்கள் அனுராதபுரத்துக்குத் தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தெவஹூவா இராணுவ முகாமில் இச்சம்பவம் இடம் பெற்றதை இராணுவத் தலைமையகப் பேச்சாளர் கெமுனு குலதுங்கா ஊர்ஜிதம் செய்தார். (ஐ-எ)

## முச்சந்தி முரளி



நிரந்தர ஆணைக்குழுவை நியமித்து இருக்கினம். அப்ப லஞ்ச ஊழலும் நிரந்தரமாகி விடப்போகுது போல ...!

## லஞ்ச, ஊழல் விசாரணை:

## நிரந்தர ஆணைக்குழு 15 முதல் இயங்கும்

கொழும்பு, டிச 3

லஞ்சம், ஊழல் குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர ஆணைக்குழு இம்மாதம் 15 ஆம் திகதி முதல் செயல்படவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த ஆணைக் குழுவை ஜனாதிபதி சந்திரிகா, நேற்று 1994ஆம் ஆண்டில் 19ஆம் இலக்க சட்டத்தின் கீழ நியமித்துள்ளதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ரி.ஏ.டி.எஸ் விஜேசுந்தரா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் நீதியரசர் சிவா செல்லையா முன்னாள் கணக்காளர் நாயகம் பி.எச்.விஜேசூரியா ஆகியோர் இந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். (இ-எ)

## பல்கலைக்கழக அனுமதி: வெற்றிடம் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், டிச. 3

1993 – 94 கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன. குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோரின் பெயர்ப்பட்டியலை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுப்பியுள்ளது.

அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் தங்கள் பெயர்களைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் புலிகள் தாக்கு பொலீஸ் பலி, மற்றொருவர் காயம்

புல்மோட்டைப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று வார யுத்த இடை நிறுத்தத்தின் பின்னர் மீண்டும் விடுதலைப் புலிகள் படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. (இ-ஐ-6-4)

## மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிக்க ஸ்ரீலங்கா படையினர் முற்றாகத் தடை

மட்டக்களப்பு, டிச. 3

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிப்பதற்கு ஸ்ரீலங்கா படையினர் தொடர்ந்தும் தடை விதித்து வருகின்றார்கள்.

அண்மையில் மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிக்க மாவட்ட இராணுவத் தளபதி அனுமதித்திருப்பதாக அரச அதிபர் திரு. பத்மநாதன் மீனவர்களுக்கு அறிவித்திருந்தார்.

ஆனால் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஸ்ரீலங்கா பொலீஸாரால் அடித்து விரட்டப்பட்டுள்ளார்கள்.

இதன்பின் மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிப்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இத்தடை மூலம் இந்த வாவியில் மீன் பிடிப்பதை நம்பி வாழும் குடும்பங்கள் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. (இ-4)

## படையினரால் விடுவிப்பு

கடந்த மாதம் 26 ஆம் திகதி கட்டுவன் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற சமயம் படையினரால் கைது செய்யப்பட்டவர் ஒருவர் நேற்றுப் படையினரால் விடுவிக்கப்பட்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் பருத்தித்துறைக்கு கப்பலில் கூட்டிவரப்பட்டார். (ஐ-173)

## 26 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் பிரபல பாடசாலைகளில் அனுமதி

கொழும்பு, நவ. 3

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 26 ஆயித்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தினுள் இந்த மாணவர்களை புதிய பாடசாலைகளில் அனுமதிப்பதற்கு கல்வி உயர் கல்வி அமைச்சு திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் மூலமாக இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கல்வி அமைச்சுக்கு கிடைக்கும் படி அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இம்முறை சித்தியடைந்துள்ள மாணவர்களில் சுமார் 7 ஆயிரத்து 500 பேர் புலமைப் பரிசில்களை பெறவுள்ளனர். (இ-ஐ-74)

## யாழ் பதில் அரச அதிபர்

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் நவம்பர் 1 ஆம் திகதியில் இருந்து யாழ்மாவட்ட பதில் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்டத்துக்கான புதிய அரசாங்க அதிபர் திரு. கே பொன்னம்பலம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்வரை திருமதி பத்தினியம்மா திலகநாயகம் பதில் அரசாங்க அதிபராக கடமையாற்றுவார்

5- 10- 94 இல் கொழும்பிலிருந்து யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இதற்கான நியமனக் கடிதம் நேற்றே மேலதிக அரசாங்க அதிபருக்குக் கிடைத்தது. (இ-4)

## கல்வி வலயம் இரண்டில்

## ஜி. சீ. ஈ.சாதாரண பரீட்சை நிலையங்கள் சில மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 3

எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி சீ ஈ சாதாரணதர பரீட்சைகளின் போது கல்வி வலயம் இரண்டில் சில பரீட்சை மண்டபங்கள், மாணவர்களின் வசதி கருதி மாற்றப்பட்டுள்ளதாக கல்விப்பணிப்பாளர் திரு. க கந்தசாமி அறிவித்துள்ளார்

★ வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலய மண்டபம் 2 யாழ்ப்பாணம் வ ஊரிக்கும்

★ வட்டு. இந்தக் கல்லூரி மண்டபம் சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்துக்கும்

★ குளமங்கால் றோ க.த.க. பாடசாலை மண்டபம் மல்லாகம் ம.வித்தும்

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபம் 4 மகாஜனா கல்லூரிக்கும்.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபம் 5 மானிப்பாய் செனஸ் ஆன்ஸ் றோ க.த.க பாடசாலைக்கும்

★ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய மண்டபம் 2

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோமாரி வருகிறது

யாழ்ப்பாணம், டிச. 3

கோமாரி கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தில் இருந்து வடபகுதி நோக்கி புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல் இடம்பெயர்ந்தவர்களுக்கான அரிசி, சீனி, பாமா போன்ற பொருள்களுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-4)

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் தீர்வை சிங்கள தலைவர்கள் முன்வைக்கவேண்டும்

### 'ஏசியாவீக்' ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, டிச. 3

தேசிய வாத உணர்வுடன் விளையாடுவதை பிரதான அரசியல் கட்சிகள் நிறுத்த வேண்டும். தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை திருப்திப் படுத்தக் கூடியதான தீர்வு ஒன்றை சிங்களத் தலைவர்கள் முன்வைக்க வேண்டும். இதுவே நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வரக் கூடிய ஒரே வழியாகும்''.

''சமாதானம் இன்னும் சாத்தியமானதே'' — என்ற தலைப்பில் ஏசியா வீக் ஆங்கில வாரசஞ்சிகையின் கடந்த 9ஆம் திகதி இதழில் மேற்கண்டவாறு ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள அதிகாரப் பகிர்வுச் சட்டம் ஆழமான குறைகளைக் கொண்டது.

உள்ளூராட்சி அம்சத்தைப் பொறுத்தவரையில் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரங்களை இச்சட்டம் வழங்கி உள்ளது. பாதுகாப்பு, நிதி, காணி நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளை கையாளும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை.

சமாதான தீர்வுக்குப் பிரதான அம்சமாக தமிழர்களின் கௌரவத்தை மீண்டும் பெற்றுக் கொடுப்பது உண்மையான பிராந்திய சுயாட்சியுமே ஆகும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த மொழிக் கொள்கை தவறானது என்பதை அண்மைக் காலத்தில் தான் சிங்களத் தலைவர்கள் பகிரங்கமாக ஒப்புக் கொண்டனர்.

இருந்தும் சிங்கள தேசிய உணர்வைத் தூண்டி விடுவதில் இன்னும் பலர் அக்கறை காட்டுகின்றனர்.

இப்படி ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## விண்வெளி ஆராய்ச்சி அதிகாரிகள் இருவர் கைது!

புதுடில்லி, டிச. 3

இந்தியாவின் றொக்கெட் திட்டம் பற்றிய தகவல்களை பணத்துக்காகவும், பாலியல் நோக்கங்களுக்காகவும் பழங்கினார்கள் என்ற குற்றச் சாட்டின்பேரில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளை இந்தியப் பொலீஸார் கைது செய்தனர்.

கைதானவர்களில் ஒருவர் விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் உதவிப் பணிப்பாளர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று ... வல்துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## அரசின் சமாதான முயற்சிகளுக்கு காமன் வெல்த் செயலாளர் பாராட்டு

இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை காமன்வெல்த் பொதுச் செயலாளர் எமேக்கா அனியோக்கு பாராட்டியுள்ளார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள அவர் கடந்த புதனன்று வெளிவிவகார அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்து உரையாடினார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்திய சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலைவரம் குறித்து அமைச்சர் கதிர்காமர் காமன்வெல்த் பொதுச் செயலாளருக்கு எடுத்து விளக்கினார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள்குறித்தும் அமைச்சர் கதிர்காமர் காமன்வெல்த் பொதுச் செயலாளருக்கு விளக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1995 ஆம் ஆண்டிற்கான கணிதம் பிரத்தியேக வகுப்புக்கள்

ஆரம்பம் இன்று **03-12-1994**

ஆண்டு (6 முதல் - 11 வரை)

ஆண்டு 10, 11 இற்கு கிழமையில் 4 வகுப்புக்கள்

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேருக்கு மட்டும் அனுமதி

விவரங்களுக்கு:
பா. கிருபாகரன்.
(விசேட பயிற்சி கணிதம்)
327, நாவலர் வீதி,
(நாவலர் மண்டபம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

[33990]

---

கூட்டுறவுப் பெரியார்
**வீரசிங்கம்**

# நினைவு தின விழா

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்
(யாழ். அரசினர் வைத்தியசாலை முன்பாக)

காலம்: 05 - 12 - 1994 திங்கட்கிழமை
காலை 9-30 மணி

சிறப்புரை:
திரு. சி. நவரத்தினம்
(தலைவர், சுன்னாகம் ப நோ. கூ. சங்கம்)
திரு. சு. டொமினிக்
(பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை)
கலாநிதி க. குணராசா
(பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

நினைவுப் பேருரை:
திரு. க. சிவானந்தமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்

கலை நிகழ்ச்சி:
**"வில்லிசை"**
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள்
நாடகம் **'வாழ்வும் வளம்பெறும்'**
ஊர்காவற்றுறை
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

விழா சிறப்புற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

]சி-9852]

---

# விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்

கல்வி ஆண்டு- 1995 ஆண்டு 6 - 11 வரை

| | |
|---|---|
| கணிதம் | — P. ஜெயக்குமார் பிரபா |
| விஞ்ஞானம் | — J. J. கொலின்ஸ் T. தவச்செல்வன் |
| சமூகக்கல்வி | — S. S. தங்காசா ஜெயபாலன் |
| வர்த்தகம் | — இ. ஜீவா |
| ஆங்கிலம் | — சௌந்தரபாண்டியன் சங்கர் |

ஆரம்பம் 4 — 12 — 1994
ஞாயிறு காலை 6-30

(சி/9921)

---

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை
யா /சுதுமலை சிந்மய
## பாரதி வித்தியாலயம் முதலிடம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான (07) மாணவர்கள் சித்தியடைந்துள்ளமையை இட்டு அவர்களை வாழ்த்தி எமது மனப்பூர்வமான நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவி
ச. நளினி (168 புள்ளிகள்)

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்,
பழையமாணவர்கள், நலன்விரும்பிகள்.

(34001)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் கடமையுணர்வுடன் பணியாற்றி, மக்களின் அபிமானத்தைப் பெற்றவரும் எமது சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவருமாகிய

## அமரர் கதிரமலை கந்தசாமி

(கிராம அலுவலர் தரம் 1)

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட
கிராம சேவையாளர் சங்கம்

யாழ்ப்பாணம்.

(33994)

---

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(கல்வி ஆண்டு 1995)

சனி - ஞாயிறு முழு நேர வகுப்புக்கள்

## O/L ஆண்டு 10, 9

ஆரம்பம்: **05-12-1994**
திங்கள் மாலை 4மணி

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| திரு. சதீஸ் | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. சங்கர் | திரு. தயாநிதி |

| | |
|---|---|
| தமிழ் | — திரு. ஆர்த்திகன் |
| ஆங்கிலம் | — திரு. கிரிதரன் |
| சமூகக்கல்வி | — திரு. கியூபேட் |
| வர்த்தகம் | — திரு. அற்புதராஜா |
| சைவசமயம் | — திரு. கிரிதரன் |
| கிறிஸ்தவம் | — திரு. கொலின்ஸ் |

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி/9917]

---

யாழ். இந்து மகளிர் கல்லூரி
லியோ கழகத்தின்
அபிவிருத்தி நிதிக்காக

வழங்கும்

# காத்தவராயன் கூத்தும் நடன நிகழ்ச்சியும்

காலம்: **04 - 12 - 1994** ஞாயிறு
மாலை 4-00 மணி

இடம்: கைலாசபதி கலையரங்கு
யாழ். பல்கலைக்கழகம்

நுழைவுச் சீட்டுக்கள் மண்டபவாயிலில்

விளம்பர அன்பளிப்பு:
பி. ஐ. பர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பரசி பட்டு மகால்
163, சிறப்பு அங்காடி (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

[33995]

---

# டோஹா - கட்டார்
# DOHA - QATAR

பிரசித்தி பெற்ற கொந்தராத்து மற்றும் பராமரிப்பு நிறுவனத்திற்கு அவசரமாகத் தேவை.

| | சம்பளம் |
|---|---|
| 1. உருக்கு பொருத்துநர்கள் (STEEL FIXERS) | QR. 700 |
| 2. குழாய் பொருத்துநர்கள் (PIPE FITTERS) | QR. 700 |
| 3. மேசன் (MASON) | QR. 700 |
| 4. தச்சுத் தொழிலாளர் கட்டடம் (SHUTTERING CARPENTERS) IQR - S. L. Rs. 13-85 | QR. 700 |

பாஸ்போட் அத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

இலவச தங்குமிடம், மருத்துவ வசதி, இலவச உணவு, உணவு அலவன்ஸ், விமானப் பிரயாணச்சீட்டு என்பன வழங்கப்படும்.

(TRUST) ரஸ்ட்
ரெக்ரூட்மன்ட் சேர்விஸ்
பிறைவேட் லிமிட்டட்,
93, 1/1 சதாம் வீதி,
கொழும்பு - 1

Labour Licence No. 549
S.L.B.F.E. Licence No. AL/549/07/94

(33996)

---

## பண்டித வகுப்பு

யாழ்ப்பாணம், டிச 3
தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அலுவலகங்களின் சார்பில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் பிரதேச பால பண்டித, பண்டித வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

இவ்வகுப்புக்களில் பங்கு கொள்ள விரும்புவோரை நாளை ஞாயிறு மாலை 4 மணிக்குப் பிரஸ்தாப பாடசாலைக்குச் சமுகம் தருமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

தமிழீழ கல்விக்கழகப் பிரமுகர்களும் யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளும் இவ் வகுப்புக்களைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைப்பர்.

## ஆலயங்களில்

மல்லாகம் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருநாள் பூசைப்பலி இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும். (சு)

---

## நவகைடன்ஸ்

யாழ்ப்பாணம்.

புவியியல்;
திரு. ம. இக்னேசியஸ்
[B. A Hons]

**A/L 95, 96**

ஆரம்பம்;
**05 - 12 - 1994**
பிற்பகல்2-00மணி

(சி/9918)

---

# எடிசன்

அக்கடமி
யாழ்ப்பாணம்,
கொக்குவில்.

ஆண்டு 4, 5
புலமைப்பரிசில்
வகுப்பு

கணிதம்
V. A. சிவா

தமிழ்
சி. குழந்தைவேலு

ஆரம்பம்:
**4-12-1994**
மு. ப. 9-30

★ எமது நிறுவனத்தில் கல்வி கற்று சித்தி அடைவோரில் கூடிய புள்ளி பெறுவோருக்கு வருடா வருடம் ரூ.1000புலமை பரிசில் வழங்கப் படுகின்றது.

(சி-9799)

---

"ஒளி இல்லம்"
பெயர் மாற்றத்துடன்

# "புதிய இல்லம்"

உங்கள் அபிமான அந்தியகாலநண்பனைப் புதிய மெருகுடன் காண விரையுங்கள்

## "புதிய இல்லம்"

210, பிரதான வீதி,
(சென். ஜேம்ஸ் தேவாலய அருகில்)
யாழ்ப்பாணம்.

(சி/9920)

---

## வெதுப்பக உரிமையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்

களஞ்சியத்திலிருந்து எமது சங்கத்திற்கு வழங்கப்படும் மாவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், மக்கள் நலன் கருதி தங்களுக்கு விநியோகிக்கப்படும் முழு மாவினையும் வெதுப்பி உற்பத்திக்கு மாத்திரமே பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஸ்பெசல் வெதுப்பி, இனிப்பு வெதுப்பி, பணிஸ், கேக் வகைகள் (அடைகேக் உட்பட), கல் பணிஸ் மற்றும் இதுபோன்ற ஆடம்பர உணவுப் பொருள்களின் உற்பத்தியை நாளை 04 - 12 - 94 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து மறுஅறிவித்தல் வரை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

எக்காரணம் கொண்டும் வெதுப்பியின் நிர்ணயிக்கப்பட்ட நிறை, விலை, ஆகியவற்றில் மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

தலைவர்
யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(34003

---

நிறைந்த சேவை குறைந்த கட்டணம்

# உதயன் அக்கடமி

(யாழ் மாநகரசபை முன்பாக)
பருத்தித்துறை வீதி நல்லூர்.

ஆண்டு 3 தொடக்கம் 11 வரையிலான வகுப்புகளிற்கான புதிய வகுப்புகள்

ஆரம்பம்; **05-12-1994**
பி ப. 4-00 மணி

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் திகழும் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.

(8056)

---

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
411/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

## கல்வி ஆண்டு - 1995

ஆண்டு 4முதல் O/L வரையான வகுப்புகள்

| | |
|---|---|
| கணிதம் | கணிதம் |
| B. P. பாஸ்கரன் | B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | விஞ்ஞானம் |
| N. மகேந்திரன் | J. J. கொலின்ஸ் |
| J. J. கொலின்ஸ் | N. மகேந்திரன் |
| சமூகக்கல்வி | சமூகக்கல்வி |
| K. S. முத்துலிங்கம் | K. கோபி |
| தமிழ் | தமிழ் |
| S. கதிர்காமத்தம்பி | S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | ஆங்கிலம் |
| J. மனோரஞ்சன் | C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | வர்த்தகம் |
| K. விக்கி | T. அரவிந்தன் |
| சமயம் | சமயம் |
| K. இராஜலிங்கம் | K. இராஜலிங்கம் |

★ O/L இற்கு கணிதம், விஞ்ஞானத்தில் ஆண்டு 9, 10 பாடத்திட்டமும் ஆண்டு 10 இற்கு ஆண்டு 9 பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

★ ஆண்டு 9, 10, 11 இற்கு பொறியியல், மருத்துவபீட மாணவர்களால் கணித விஞ்ஞான பாடங்களில் விசேட மீட்டல் வகுப்புகள் நடைபெறும்.

★ ஆண்டு 8 இற்கு இளநிலைத் தேர்வை ஒட்டி விசேட ஆசிரியர் குழுவால் பயிற்றுவிக்கப்படும்.

ஆரம்பம்: **04-12-1994** ஞாயிறு முற்பகல் 9-30 மணி

[சி-9854]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை

## நடன ஆசிரியை தேவை

Diploma பட்டம் பெற்றவர் அல்லது ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்.

டிசம்பர் 15இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

— அதிபர்.

(சி-9780)



## கண்ணீர் அஞ்சலி

அமரர்
சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்
(முன்னைநாள் உள்ளூராட்சி ஆணையாளர்)

அரச சேவை சுயவியாபாரம், நன்மை, விருப்பம் என்று கொள்ளாது செயற்பட்ட எமது வழிகாட்டியை நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

உள்ளூராட்சித் திணைக்களமும்
உள்ளூராட்சி மன்றங்களும்
யாழ். பிராந்தியம்.

[சி-9796]



## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் கனகசபாபதி கந்தையா
(இளைப்பாறிய கொழும்பு சினிமாஸ் லிமிட்டெட்)

பிறப்பு: 16 — 05 — 1927
இறப்பு: 14 — 12 — 1993

திதி: 3 — 12 — 1994

ஓராண்டு போனாலும் உங்கள் நினைவும் உங்கள் உருவமும் எம்மை விட்டு அகலா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

மனைவி, சகோதரங்கள், மச்சாள், மருமக்கள், உறவினர்.


அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி
திருமதி க. நாகேஸ்வரி

206 யாழ். வீதி,
மானிப்பாய்.

(8052)



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 08 — 1913

மறைவு: 25 — 11 — 1992

அமரர்
கயிலாயஞ்செட்டியார் பழனிச்சாமி

திதி: கார்த்திகை வளர்பிறை

வண்ணை வேங்கடத்தான் கோபுரம் போல
மண்ணில் புகழ் விளங்க வாழ்ந்து
விண்ணிலும் சிறப்பாக இருப்பதை
எண்ணி நாங்களும் வாழ்கிறோம்.

என்றும் நினைக்கும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள் குடும்பங்கள்.

13, ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

[33980]


# அரியாலை சாம்சன் அகதி முகாமில்
# தொற்றுநோய் பரவும் ஆபத்து

யாழ்ப்பாணம், டிச. 3

அரியாலையில் உள்ள சாம்சன் இடம்பெயர்ந்தோர் முகாமில் சுகாதார சீர்கேடு மிகவும் மோசமான நிலையை அடைந்திருப்பதாக புகார் கூறப்படுகிறது.

வெள்ளம் புகுந்து அங்குள்ள மலசல கூடங்கள் எல்லாம் நிரம்பி வழிவதால், அசுத்தங்கள் வெளியில் நாலாபுறமும் பரவி வருவதாகவும் —

அதே சமயம் முகாமில் உள்ள குடிசைகளைச் சூழவும் அசுத்தம் பரவிய வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமை நீடித்தால், அங்குள்ள மக்களுக்கு தொற்று நோய்கள் பரவி, பெரும் ஆபத்தை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்த அகதி முகாமில் 60 தனியான குடிசைகளில் 150 குடும்பங்கள் தங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-17)

### கொழும்பு 'பாதாள உலகின்'

## 3 முக்கிய உறுப்பினர்கள் வெல்லம்பிட்டியில் கைது

கொழும்பு, டிச.3

கொழும்பு ''பாதாள உலகின்'' மூன்று முக்கிய உறுப்பினர்கள் வெல்லம்பிட்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை குண்டு வீசித் தாக்கிக் கொலை செய்த சம்பவம் உட்பட பல குற்றச் செயல்களுக்காக இவர்கள் தேடப்பட்டு வந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

## சீனாவில் நாய் வளர்க்க ரூ. 25 ஆயிரம் கட்டணம்!

பீகிங், டிச. 3

சீனாவில் ஒரு குடும்பம் ஒரு நாயை மட்டுமே இனி வளர்க்க முடியும்!

அது மட்டுமல்ல நாய் வளர்ப்பவர்கள் முன்கூட்டியே பதிவுக் கட்டணமாக 600 டாலர் (சுமார் 25 ஆயிரம் ரூபா) செலுத்த வேண்டும்.

அதற்குப் பின்னர் வருடா வருடம் 200 டாலர் (சுமார் 8 ஆயிரம் ரூபா) கட்டணம் செலுத்த வேண்டும்.

சீனத் தலைநகரான பீகிங்கில் நேற்று வெளியிடப்பட்ட புதிய விதிகள் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளன.

நாய்களை இரவு 8 மணிக்கும் காலை 7 மணிக்கும் இடையில் மட்டுமே வீட்டுக்கு வெளியே கூட்டிச் செல்ல முடியும் என்றும் புதிய விதிகளில் கூறப்பட்டுள்ளது. (ஒ-க-6)

## உலகை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது எய்ட்ஸ்

### ஐ. நா. செயலாளர் கூறுகிறார்

பாரிஸ், டிச. 3

எய்ட்ஸ் நோய் உலகை நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கி இருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்துள்ளார்.

பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் நேற்று முன்தினம் ஆரம்பமான உலக எய்ட்ஸ் தடுப்பு தின மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

40க்கும் அதிகமான நாடுகளின் பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

வறிய நாடுகளில் எய்ட்ஸ் நோயை ஒழிப்பதற்கு எல்லா நாடுகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (ஒ-எ-6)

### எதிர்கால தேர்தல்களில்

## சொத்து விவரம் காட்டியே போட்டியிட முடியும்!

### அரசு சட்டம் கொண்டு வரும்

கொழும்பு, டிச. 3

எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் போது, தங்களின் உடைமைகள் மற்றும் சொத்துகளை வெளியிட நிர்ப்பந்தம் செய்யும் சட்டம் ஒன்றை கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இத்தகவலை நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் வெளியிட்டார். (ஒ-எ-6)

## புதிதாக வரிகள் எதுவும் விதிக்கப்பட மாட்டாது!

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, டிச 3

செல்வவரி, மூலதன வரி மற்றும் நன்கொடைவரி ஆகியவற்றை விதிக்கும் நோக்கம் தமக்குக் கிடையாதென அரசு அறிவித்துள்ளது.

அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இத் தகவலை நேற்று முன்தினம் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

குறிப்பிட்ட வரிகளை அரசு விதிக்கலாம் என்று பத்திரிகைகளில் வெளியான செய்திகள் ஆதாரமற்றவை என்றும் அவர் தெரிவித்தார்,

அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் இப் பொய்ச் செய்திகளை பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ-எ)

## ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 2

காங்கேசன்துறை லங்கா சிமெந்து துறைமுக ஊழியர் சங்கத்தின் விஷேட கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு வடக்கு பக்கமாகவுள்ள தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு. இளையவன் கலந்து கொள்வார்

## 68 பேருக்கு மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், டிச. 3

நல்லூர் லயன்ஸ் கழகம், வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 68 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு, நாவலர் இந்து இளைஞர் சங்கத்தில் வழங்கும்.

அக்கருணம் வைத்திய கலாநிதி எமில் அத்தனாசியர் ''கண் பார்வையும் சிகிச்சையும்'' என்னும் தலைப்பில் அங்கு உரை நிகழ்த்துவார். (ஒ)

## நீரிழிவு நோய் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். மாநகர சுகாதார பிரிவினரும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து நடத்தும் நீரிழிவு நோய் சம்பந்தமான கருத்தரங்கும், பரிசோதனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறும். (ஒ-17)

## புலிகளின் குரல் வானொலியில்

03 — 11 — 1994

**சனி இரவு**

- ★ 8-01 — அறிவியற் கலசம்
- ★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — சித்திரம் — சந்திரா தனபாலசிங்கம் எழுதிய ''பனை வளர்ப்போம் பயன் பெறுவோம்''
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

04 — 12 — 1994

**ஞாயிறு காலை**

- ★ 7-02 — மாவீரர் வைக்கம்.
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் உப - அலுவலகங்கள்
1987ஆம் ஆண்டின் 15ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41ஆவது பிரிவின் கீழ் 1995ஆம் ஆண்டிற்கான ஆதனவரி பற்றிய

## அறிவித்தல்

1995ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும் தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டு மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித் தொகையை 1995 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் சுந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே 1995 ஜனவரி 31, ஏப்ரல் 30, ஜூலை 31, அக்டோபர் 31 செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ஆம் கந்தாயவரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும்
2ஆம் கந்தாயவரி ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும்
3ஆம் கந்தாயவரி செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும்
4ஆம் கந்தாயவரி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்பட வேண்டும்.

மேற்குறித்த கால எல்லைக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15% மும் வியாபார நோக்கத்திற்காக பாவிக்கப்படும் ஆதனமாயின் 20% மும் பற்றாணைச் (தண்டம்) செலவாக அறவிடப்படும். இத்தொகையை குறித்த காலத்தில் உரிய ஆதனவரி செலுத்தப்படாவிடில் அத்துடன் சேர்த்துக் கணிக்கப்படும்.

மேற் காட்டியபடி காலாண்டு முடிவுறும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலத்துக்குரிய ஆதனவரி செலுத்தப்படாது விட்டால் குடியிருப்போர் பொருள்கள் நடுக்கட்டல் செய்யப்படும் என்பதை குடியிருப்போர் கவனிக்க வேண்டும்.

ஆதனவரி சம்பந்தமான இவ் விளம்பரத்தைத் தவிர வேறு அறிவித்தல்கள் ஏதும் வழங்கப்படமாட்டா. ஆதன உரிமையாளர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு தங்கள் ஆதனத்தின் வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், தங்கள் ஆதனத்தின் உரிமை தங்களால் மாற்றப்படும் போது அல்லது பிரிவிடுதல் செய்து வழங்கப்படும் போது எம்முடன் தொடர்பு கொண்டு உரிய வழி முறைகளைப் பின்பற்றி எமது பதிவேடுகளில் பெயர்களை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலதிக விவரங்களை உப அலுவலகங்களிலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ அறிந்து கொள்ளலாம்.

க. கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை.

வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி
01-12-1994.

(சி 9795)



# கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி. திருநெல்வேலி.

ஆண்டு 4 தொடக்கம் O/L வரை

## கல்வி ஆண்டு - 1995

| | |
|---|---|
| ✶ கணிதம் | ✶ விஞ்ஞானம் |
| வாமதேவன் நவநேசன் | இ. செல்வவடிவேல் கண்ணதாசன் |
| ✶ சமூகக்கல்வி | ✶ தமிழ் |
| குணசிங்கம் சுகுமார் | புலவர் சிவா ஜெயக்குமார் |
| ✶ வர்த்தகம் | ✶ ஆங்கிலம் |
| அருண் | சந்திரமௌலி |

### புலமைப் பரிசில் வகுப்புகள்

கணிதம் — S. சோமேஸ்வரபிள்ளை
தமிழ் — திருபாசநாதன்

ஆரம்பம்: 05 - 12 - 1994
திங்கள் மாலை 3 மணி

(சி-9914)



பண்ணாகம் அண்ணா கலை மன்ற

# வெள்ளி விழா

காலம்: 03 - 12 - 1994 சனிக்கிழமை 04 - 12 - 1994 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00மணி ✶ இடம்: "மோகன் அரங்கு" வடக்கம்பரை"

★ நிகழ்ச்சிகள் ★

● பட்டி மண்டபம் — திரு. இ. ஜெயராஜ் அவர்கள் தலைமையில்

● கவியரங்கு

● நாடகங்கள்

சிறப்புரைகள்: பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. ஆறு. திருமுருகன்

S. G சாந்தன் குழுவினரின் எழுச்சிக் கானங்கள்

[சி-9913]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல விடுமுறை நாட்களும் (தமிழீழம் உட்பட) அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் ரூபா 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம் பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [33928]

வீட்டுத் தேவைக்கு உகந்த பசுவும் கன்றும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: இல. 15/14A, சங்கிலியன் வீதி, நல்லூர். (33988)

7 வாரங்கள் நிரம்பிய பூச்சி நீக்கிய, கறுப்பு நிற, தூய ஜேர்மன் ஷெப்பர்ட் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: தி. விஸ்வநாதன், மாரி அம்மன் லேன், திருநெல்வேலி. (8049)

அடை வைக்கக் கூடிய நல்லின கோழி முட்டைகள், வான் கோழி முட்டைகள் மற்றும் இதரை வாழைக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33966)

3, 4 அங்குல எஸ்–லோன் பைப்புகள், பொலித்தீன் தாள் சகல அளவுகளிலும் சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் அலுமினியம் தாச்சிகள், எனாமல் பெயின்ற் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், 213 C, மருத்துவமனை வீதி (கிட்டு சாலை), யாழ்ப்பாணம் [33981]

இரண்டு மாதங்கள் நிரம்பிய Dobberman Pincher பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. Bala, இல. 18, நக்கா வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (33983)

### விற்பனையாகின்றது

சிவம் கலண்டர்கள், பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறி வகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை 165, மின்சார நிலையம், தலைமையகம் – மக்மிலன் யாழ்ப்பாணம். (சி–9908)

### இறைச்சிக்கோழிவிற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் தினமும 7 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (33965)

### பொக்கட் கலண்டர்கள்

1995 பொக்கட் கலண்டர்கள், பெரிய பட கலண்டர்கள், சினிமா பாடல் கொத்து, நத்தார் வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும விற்பனையாகிறது. ராஜன் பொத்தக சாலை, 12, பழைய பேருந்து நிலையம், யாழ்ப்பாணம் [33913]

### தேவை

பிறாதைப்பதற்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. எதிர்பார்க்கும் வேதனத்துடன் விண்ணப்பிக்கவும். மே/பா இல. 724, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [33937]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Christhomber புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9, நக்கா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (33987)

### ரி. வி. டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள், ரி. வி. டெக், எல்லாவிதமான மணிக்கூடுகளையும் பழுதுபார்த்துக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி–9911)

### பயிற்சி வகுப்புகள்

கேக்ஐசிங், சமையற்கலை, ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் டிசம்பர் விடுமுறையில் ஒருமாதகால வகுப்புக்கள் 5-12-94 முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் உடன் தொடர்பு: Yogi Home Science Academy, 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (சி–9771)

### மணமகன் தேவை

யாழ் இந்து, 34 வயது, A/L சித்தியடைந்த ஒரளவுக்கு CIMA படித்த தற்போது கொழும்பில் பிரபல நிறுவனம ஒன்றில் Accounts Clerk ஆக வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: இல. 725, மே/பா, உதயன், யாழ்ப்பாணம் (33960)

### தவறிவிட்டது

29–11–94-ம் திகதி இரவு வந்த படகில் முக்கியமான ஆவணங்கள் உடைய பச்சைப் பொலீத்தீனால் கட்டப்பட்ட பார்சல் ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து மாறி எடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்: மாறிய பார்சல் ஒன்று எம்மிடம் உள்ளது. ந பத்மநாதன், 19, இராண்டாம் ஒழுங்கை, பலாலி றோட், யாழ்ப்பாணம். (8051)

### நத்தார் இன்னிசை

யாழ்ப்பாணம், டிச 3
தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் வருடாந்த நத்தார் இன்னிசை ஆராதனை நாளை 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (க–161)

## விப்ஜியோர்

(குளப்பிட்டிவீதி, ஆனைக்கோட்டை.)

ஆண்டு 4 முதல் O/L வரை

புதிய பிரிவு ஆரம்பம்:

**04-12-94**

(ஞாயிறு காலை 9மணி)

விஞ்ஞானம்:
J. J கொலின்ஸ்
S P. சோதீ

கணிதம்:
அருள்ராஜ்
ஜெயக்குமார்
N. A. N. றஞ்சித்

தமிழ்:
தங்கவேல்
குழந்தைவேல்

சமூ. கல்வி
கோபி
சோமேஸ்வரன்

ஆங்கிலம்:
ஜெயானந்தன்
சேகர்

வர்த்தகம்
அற்புதராஜா

(33956)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 18 – 01 – 1945

விண்ணில்: 13 – 12 – 1993

**அமரர் வே. சோமசுந்தரம் (சோமு)**

கீரிமலை
[C. T. B சாரதி]

திதி: 3 — 12 — 1994

நீங்கள் எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி எம்மை விட்டுப் பிரிந்து போனாலும், எங்கள் நெஞ்சத்தில் உங்கள் நினைவு உயிரிருக்கும் வரை நீங்காது!
ஆறாதே எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்!

மனைவி, மக்கள்,
உறவினர்.

கருணாகரப்பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய். (7823)

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்திச்சந்தி, யாழ்ப்பாணம்.

**கல்வி ஆண்டு - 1995**

ஆண்டு 3 முதல் O/L வரை

ஆரம்பம்: **05 - 12 - 1994**
திங்கள் பிற்பகல் 3 மணி

| | |
|---|---|
| **விஞ்ஞானம்**<br>இரா. செல்வவடிவேல்<br>T. S. குணாளன் | **கணிதம்**<br>S. கிருபாகரன்<br>T. S. குணாளன்<br>K. ரஞ்சி |
| **சமூகக்கல்வி**<br>K. S. முத்துலிங்கம்<br>K. றாபி<br>K. அருந்ததி | **தமிழ்**<br>N. புவனேந்திரன்<br>K. சிவரூபி<br>G. கௌரி |
| **ஆங்கிலம்**<br>P. சௌத்திரி<br>S. சிவராஜா | **வர்த்தகம்**<br>V. N ராஜன்<br>**சமயம்**<br>N. சதீஸ் |

**புலமைப் பரிசில் வகுப்பு (1995)**

தமிழ்: சி. குழந்தைவேலு, N. சதீஸ்
கணிதம்: T.S. குணாளன், K. ரஞ்சி

★ புதிய அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்,

(சி–9776)

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

**கல்வி ஆண்டு - 1995**

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையிலான வகுப்புக்கள்

ஆரம்பம்: **05 - 12 - 1994**
திங்கள் 12-00 மணி

எமது
தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

✶ விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
சண்
ஆனந்தி

✶ தமிழ்/சமயம்
பண்டிதர்
என். எஸ் மணியம்
யோகராணி

✶ ஆங்கிலம்
மகாலிங்கம்
ரமேஸ்
தர்மலிங்கம்

✶ கணிதம்
இந்திரன்
மகேந்திரன்
பரா
வாமதேவன்

✶ சமூகக்கல்வி
வேலா
சிவனேசன்
மயூரன்

✶ வர்த்தகம்
நாதன்

**புலமைப் பரிசில் வகுப்பு**
கணிதம் — S. S. பிள்ளை
தமிழ் — திருவாசகநாதன்

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி–9649]

## SERVICE OF THANKSGIVING
for the life and work of



**M. THAMBITHURAI**
(Retired General Secretary, Y. M. C. A. Jaffna)

at the C. S. I. Church, Uduvil
on
Saturday, December 03, 1994 at 4-00 p.m.
Friends, Relatives and well - wishers are Cordially invited

Mrs. Thevy Tambithurai, Children
and Rev. D. S. Thiagarajah.

Uduvil. [33978]

உ
சிவமயம்

## இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்

**"இந்து தர்மம்" - மலர் - 3**
(நாவலர் குருபூசை மலர்)

# வெளியீட்டு விழா

இடம்: திவ்விய ஜீவன சங்க மண்டபம், நல்லூர்

காலம்: 04 — 12 — 1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணி

தலைவர்:
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(காப்பாளர் இந்து சமயப் பேரவை)

பிரதம விருந்தினர்:
கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர் இந்து நாகரீகத் துறை யாழ் / பல்கலைக்கழகம்)

வாழ்த்துரை:
சிவஸ்ரீ கு. குமாரசு குருக்கள்
(பிரதமகுரு, ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானம்)
திரு. சி. கனகரத்தினம் ஜே. பி. யூ. எம்.
(தலைவர் திவ்விய ஜீவன சங்கம்)

வெளியீட்டுரை:
திரு. போ. பத்மநாதன்
(பிரதி அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)

மதிப்பீட்டுரை:
சைவத்திரு. சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)

முதற்பிரதி பெறுவோர்:
திரு. கேசவன் (சட்டத்தரணி)
திரு. ச. பொ. இராசலிங்கம் (பரஸ்கோ உரிமையாளர்)

சிறப்புப் பிரதி பெறுவோரும்,
சஞ்சிகை பிரசுரிப்பதற்கு உதவியோரும்

நல்லூர் வாழ் இந்து சமய அபிமானிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ. மகாலிங்கம், தலைவர்.
சி. சக்திகிரீவன், செயலாளர்.
[சி–9793]

உ

## விவாஹ வரவேற்பு அழைப்பு

கரவெட்டி தச்சன்தோப்பு
சிந்தாமணி விநாயகர் ஆலய குரு
சிவஸ்ரீ
ப. சச்சிதானந்த குருக்கள் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
**திவாகரன் (கண்ணன்)**
அவர்களுக்கும்

மாவை ஆதீனம்
சிவஸ்ரீ
சு. துரைச்சாமி குருக்கள் தம்பதிகளின்
புத்திரி - சௌபாக்கியவதி
**நெஜலஷ்மி (சாந்தி)**
அவர்களுக்கும்

விவேகானந்தமேடு, கமலாமோடி மண்டபத்தில் 14-11-1994இல் இனிது நடைபெற்ற திருமணத்தின் வரவேற்பு வைபவம் மணமகன் இல்லத்தில் கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் (04 - 12 - 1994) ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் பந்துமித்திர சகிதம் வந்திருந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
சிவஸ்ரீ ப. சச்சிதானந்த குருக்கள் தம்பதிகள்.
சிந்தாமணி விநாயகர் ஆலயம், தச்சன்தோப்பு,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்,

(33959)

## அறிவித்தல்

கோப்பாய் தெற்கு
**தனிப்பனை வீரபத்திரர் சுவாமி கோயில்**

மேற்படி ஆலயத்திற்குச் சொந்தமான தோட்டக் காணிகள், வயல் காணிகளில் குத்தகைக்கு குடியிருப்போர் அனைவரும், அனுமதி பெறாமல் குடியிருப்போரும் இன்றிலிருந்து 15 - 12 - 1994க்கு முன்னர் தயவுசெய்து என்னை பின்வரும் முகவரியில் சந்திக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

ஆலய நிதி பற்றாக்குறையைப் பூர்த்தி செய்யவும், புதிய குத்தகைகள் பற்றி தீர்மானிக்கவும் ஆலய நிர்வாகம் சில முடிவுகளை மேற்கொள்ளவுள்ளதால் தவறாது சந்திக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

பா. தவபாலன்
சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ்,
சத்திய ஆணையாளர்.

முகவரி:
82/5, நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர். (33957)

கல்வியின் கருவூலம் மட்டுமல்ல;
பண்பின் விளைநிலமும் இதுதான்

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

ஆண்டுகள் 3 - 11 வரைக்கான
புதிய அனுமதிகளை 5 - 12 - 1994இன் முன்னர்
உறுதி செய்துகொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பொய்ப் பிரசாரம் உதவ மாட்டாது

நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதற்காக முயற்சி எடுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐரோப்பிய சமூக அதிகாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்கென பிரஸ்தாப அமைப்பினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

இந்த அறிக்கையை, வேண்டுகோளை என்ன நோக்கத்துடன் ஐரோப்பிய சமூகத்தினர் விடுத்தனர் என்பது ஒரு புதிராகவே இருக்கிறது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான ஆரம்பப் பேச்சுவார்த்தை ஒக்ரோபர் 13, 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மிகவும் சுமுகமாகவே நடந்தன. பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகள் ஒத்துழைக்கவில்லை என்ற குறைபாடு எதுவும் இருக்கவில்லை.

இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை பத்து நாள்களில் தொடங்குவதாகவே இருந்தது. அதனையும் விடுதலைப் புலிகள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையை நிறுத்தியது அரசாங்கம்தான். சரியாகச் சொல்வதானால், பாலத்துறைக் குண்டு வெடிப்பை ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு வாக்குத்திரட்டும் சம்பவமாகப் பயன்படுத்த முனைந்ததைக் கண்டு அஞ்சிய அரசாங்கம், பேச்சுவார்த்தையை நிறுத்தியது.

அந்த அமளி முடிந்து சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னராவது அரசாங்கம் பேச்சுவார்த்தை குறித்து சாதகமான சமிக்ஞைகளைக் காட்டவில்லை. வெறும் பேச்சளவுடனேயே நின்றது.

விடுதலைப் புலிகள் தரப்பில், நல்லெண்ண நடவடிக்கையாக, மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நிறுத்தத்தைக் கூட அரசு சரியாகப் பயன்படுத்தி பேச்சுவார்த்தையை மீண்டும் நடத்துவதில் ஆர்வம் காட்டவில்லை!

பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம் என்பனவற்றை முற்றாக மறந்த நிலையில் கடந்த ஐந்து வாரங்களைக் கழித்தது — காலம் கடத்தியது — அரசாங்கமே அன்றி விடுதலைப் புலிகள் அல்லர். கடந்த இரண்டு நாள்களுக்கு முந்தித்தான், மௌனம் கலைந்து, நத்தாருக்கு முன்னர் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று (திகதியும் குறிப்பிடாமல்) மொட்டையாகக் கூறியிருந்தது!

விடுதலைப் புலிகளோ தாம் சமாதானத்துக்கும், பேச்சுவார்த்தைக்கும் எப்போதுமே தயார் என்பதனை மிகத் தெட்டத் தெளிவாகக் கூறி வந்திருக்கிறார்கள். தமிழீழத் தேசிய தலைவர் திரு. பிரபாகரன், ''நாம் சமாதானத்தின் பாதைக்கு இடையூறாக நிற்கவில்லை. நாம் சமாதானத்தின் கதவுகளை சாத்திவிடவும் இல்லை. நாம் சமாதானப் பேச்சுகளுக்குத் தயாராகவே இருக்கிறோம். பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடருமானால் நாம் அதில் பங்குகொள்வோம்'' — என்று இவ் வாரம் தமது மாவீரர் தினச் செய்தியில் தெட்டத் தெளிவாக, அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தார்.

ஆயினும்—

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை; பின்னடிக்கிறார்கள் என்ற பொய்யான தோற்றம் ஒன்று கொழும்பினூடாக உலகத் தலைநகரங்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறதா? முந்திய அரசாங்கத்தைப் போன்று பொய்ப் பிரசாரம் நடத்தப் படுகிறதா?—என்ற சந்தேகம் எழுகிறது. இது சமாதானத்தை அடைவதற்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்க மாட்டாது, உதவ மாட்டாது என்பதை சந்திரிகா அரசு உணர வேண்டும்.

சமாதானப் பேச்சை மீண்டும் விரைவில் ஆரம்பியுங்கள். காலத்தை வீணாக்காதீர்கள் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டிய ஐரோப்பிய சமூகம், அடுத்த பக்கம் திரும்பி ''புத்திமதி'' கூறுவது விந்தையானதாகும். உண்மையைக் கண்டறியாமல் ''புத்திமதி'' கூற முனைவது அவசரக் குடுக்கைத் தனமே!

---

கடந்த தேர்தலின் போது

# கட்சி விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டோர் மீது நடவடிக்கை

### ஐ. தே. க. செயலர் அறிவிப்பு

கொழும்பு, டிச 3

கடந்த நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ. தே. க பொதுச் செயலாளர் காமினி அத்துக் கோறளை அறிவித்துள்ளார்.

விசாரணையின் போது கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களின் உயர்நிலை கவனிக்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறினார்.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்டதற்காக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட ஏ. ஜே. ரணசிங்கா மற்றும் ஹெட்சன் சமரசிங்கா ஆகியோர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-எ-5)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிச.

பரந்தனில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரிக் கிளைப் பாடசாலையின் ஒளி விழா கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி திரு. த. குருக்குலராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (க-161)

## யோகாசன கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 3

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் நாளை பிற்பகல் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடத்தவிருந்த யோகாசனக் கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகி தெரிவித்துள்ளார். (அ)

# பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தின் வெள்ளி விழா

### இன்றும் நாளையும் நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 3

பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் மாலை 5 மணிக்கு வழக்கம்பரை மோகன் அரங்கில் நடைபெறும்.

மன்றத் தலைவர் திரு. அ. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இன்று நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சியில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புரை நிகழ்த்துவார். வெள்ளி விழா சிறப்பு மலரை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் வெளியிட்டு வைப்பார்.

யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி உட்பட பலர் அங்கு சொற்பொழிவுகளை நிகழ்த்துவர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். திரு. இ. ஜெயராஜை நடுவராகக் கொண்டு பட்டி மண்டபமும் இடம்பெறும்.

நாளை ஞாயிறு நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் திரு. ஆறு. திருமுருகன் சிறப்புரை ஆற்றுவார்.

இறுதியில் மாணவரின் கலை நிகழ்ச்சிகள், கவியரங்கு, நாடகம் மற்றும் சாந்தனின் புரட்சிக் கானங்களும் இடம்பெறும்.

# ஒய்வூதிய நிலுவைப்பணம் இம்மாதம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், டிச. 3

ஒய்வூதியர்களுக்கான விசேட வாழ்க்கைப்படி அலவன்ஸ் (260 ரூபா)— ஐந்து மாதங்களுக்குரிய நிலுவைக் கொடுப்பனவு இம்மாதம் வழங்கப்படும் என்று தெரிய வருகிறது.

93 ஜனவரிமுதல் மே மாதம் வரையான 5 மாத நிலுவைப் பணமாக ஆயிரத்து 300 ரூபாவே இம்மாதம் வழங்கப் படவுள்ளதாக யாழ். செயலக ஒய்வூதியப் பகுதியினர் தெரிவித்ததாக வடமாநில ஒய்வூதியர் சம்மேளனத்தின் செயலாளர் கூறியுள்ளார்.

முரண்பாட்டு நிலுவையாக உள்ள கொடுப்பனவு எதிர் வரும் ஜனவரியில் வழங்கப் படும்என்று எதிர்பார்க்கப்படுவதாவும் தெரியவருகிறது.

# காவலில் உள்ள சுவாமியை பிணையில் விட மறுப்பு!

சென்னை, டிச 3

நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சுவாமி பிரேமானந்தாவை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி திருச்சி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மாவட்ட தலைமை நீதிபதி திரு. அகமத்கான் நேற்று தள்ளுபடி செய்தார்.

இதேவேளை— சுவாமி பிரேமானந்தாவைஇம்மாதம் 15 ஆம் திகதிவரை தொடர்ந்து நீதிமன்றக் காவலில் வைத்திருக்குமாறு கிரனூர் குற்றவியல் நடுவர் மன்ற நீதிவான் முரளிதரன் நேற்று உத்தரவிட்டார்.

சுவாமி பிரேமானந்தா கடந்த மாதம் 19 ஆம் திகதி பொலீசாரால் கைது செய்யப் பட்டது தெரிந்ததே.

இதேவேளை இலங்கையைச் சேர்ந்த இளம் பொறியியலாளர் ஒருவரின் எலும்புக்கூடு சுவாமி பிரேமானந்தாவின் ஆச்சிரமத்தில் பொலீசாரினாலும், நிபுணர்களினாலும் தோண்டி எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ-ஐ-4)

# டில்லியில் சார்க் மாநாடு ஏப்ரல் 15 இல் ஆரம்பம்

### கலந்துகொள்ள சந்திரிகா சம்மதம்

கொழும்பு, டிச. 3

சார்க் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சம்மதம் தெரிவித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் அமைப்பின் தலைமைப் பதவியை அடுத்த ஆண்டில் இந்தியா ஏற்றுக்கொள்ளவுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு, பூட்டான், இலங்கை ஆகிய நாடுகள் சார்க் அமைப்பில் உள்ளன. (ஐ)

# குறுகிய காலத்தில் விவசாயப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், டிச. 3

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் குறுகியகால பயிற்சி வகுப்புக்கள் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் இயற்கை பசளை சம்பந்தமான பயிர்சி வகுப்பும் —

19ஆம் திகதி மரக்கறி பயிர் நாற்று மேடை சம்பந்தமான பயிற்சி வகுப்பும் —

26 ஆம் திகதி மிளகாய் செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 7ஆம் திகதிக்கு முன்பாக திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறும், பயிற்சிநெறியில் பங்குபற்றுவோருக்கு நாள் ஒன்றுக்கு 20 ரூபா ஊக்குவிப்புப்படி வழங்கப்படும் என்றும் விவசாய பயிற்சி நிலைய... விவசாய பணிப்பாளர் திரு. ச. சின்னத்துரை ... துள்ளார். (ஐ-17)

# அமைச்சரின்வீட்டில்வைத்து செயலாளர் தாக்கினார்!

### பத்திரிகையாளர் முறைப்பாடு

கொழும்பு, டிச. 3

அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவின் தங்காலை வீட்டில் வைத்து, பத்திரிகையாளர் கே.கே. ஆரியதாசாவை அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எனக் கூறப்படும் நபர் ஒருவர் தாக்கியதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெறும்போது அமைச்சர் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது.

இணைப்புச் செயலாளர் தன்னை அறை ஒன்றுக்குள் அழைத்துச்சென்று முகத்தில் பலமாகத் தாக்கினார் என்று திரு. ஆரியதாசா முறையிட்டுள்ளார்.

இச்சம்பவத்தை கடுமையாக ஆட்சேபித்து வெகுஜனத் தொடர்பாளர் சங்கம், ஜனாதிபதி சந்திரிகா, தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளது. (ஒ)

# வங்கி கடன் வழங்கலில் நிபந்தனைகள் மீறப்பட்டன

### அதிகாரிகள் மீது விசாரணை

கொழும்பு, டிச. 3

அரச வங்கிகள் கடன் வழங்குகையில் கடைப்பிடிக்கப் படவேண்டிய சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகள் மீறப் பட்ட சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் —

இது தொடர்பாக இரு அரச வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் சிலர் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் முறைகேடுகளால் வங்கிகள் சுமார் 10 கோடி ரூபாவை இழந்துள்ளன என்றும் வங்கிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

கிழக்கில் வெள்ள அழிவுகள்:

# வெளிநாட்டு உதவியை இலங்கை கோரும்

### அமைச்சர் பௌஸி தகவல்

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வீடு வாசல்களை இழந்த சுமார் ஒரு லட்சம் குடும்பங்களுக்கு உதவ வெளிநாட்டு உதவியை இலங்கை அரசு கோரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ. எச். எம். பௌஸி இதனைத் தெரிவித்தார்.

வெள்ளத்தில் சுமார் 60 ஆயிரம் வீடுகள் அழிந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

வெள்ள அகதிகளுக்கு உதவ இலங்கையில் உள்ள ஐ. நா. காரியாலயம் முன் வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ-6)

# பொது நலவாய அமைப்பின் செயலாளர் கொழும்பில்!

கொழும்பு, டிச. 3

பொது நலவமைப்பின்செயலாளர் நாயகம் திரு. அமிகா அனாயகோ கொழும்புக்கு விஜயம் செய்துள்ளார்.

பொதுநல அமைப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் பற்றி ஜனாதிபதி வெளியுறவு அமைச்சர் மற்றும் முக்கிய தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்தவே தாம் இலங்கை வந்திருப்பதாக திரு. அனாயகோ தெரிவித்தார்,

பொதுநல அமைப்பு பலம் வாய்ந்த சக்தியாக வளர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மனிதஉரிமைகள், அரசியல் துறையில் ஜனநாயகம் போன்ற அடிப்படை விஷயங்களை அங்கத்துவ நாடுகள் ஊக்கமாகப் பின்பற்றுவதற்கு பொதுநல அமைப்பு முயற்சி செய்து வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## எழுதுவினைஞர் பயிலுநர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 3

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் எழுதுவினைஞர் பயிற்சியைப் பூர்த்தி செய்த பயிலுநர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறஉள்ளது.

சுண்டிக்குளியில் உள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலுக்கு சகல பயிலுநர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாண பயிற்சி முகாமையாளர் திரு. ம. சிவயோகசுந்தரம் கேட்டுள்ளார். (அ)

## தொழிற்சங்க பாடசாலை

நாட்டில் தொழிற் சங்கப் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்ப... பயிற்சி அமைச்சு நடவடிக்கை எடுக்க... தெரிவிக்கப்படுகிறது (இ-ஐ-6)

## சடாட்சர சண்முகதாஸ் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 3

வடக்கு கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சின் பிரதிச் செயலாளரும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமாகிய அமரர் சி. சடாட்சர சண்முகதாஸின் மறைவு குறித்த இரங்கல் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். வலயம் – 2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலாளர் திரு. ஆ. மகாலிங்கம், யாழ். வலயம்– 2 பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன், உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா, சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்துவர்.

அதிபர்கள், ஆசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயம் — 2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கேட்டுள்ளார். (இ-4)

---

## இதய அஞ்சலி

வடக்கு கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரும், முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளரும், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமாகிய

உயர்திரு
**சி. சடாட்சரசண்முகதாஸ்**
(S. L. A. S., B. A. Cey.)

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னார் உள்ளூராட்சி ஆணையாளராக எமது சேவையினருக்கு ஆற்றிய அளப்பெரும் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம்

நாவலர் கலாசார மண்டபம்,
யாழ்ப்பாணம். (சி-9851)

## கண்ணீர் அஞ்சலிகள்

காட்சிக்கு எளியனாய் கடும்சொல்லன் அல்லனாய்
மாட்சியுடன் பணியாற்றி மக்கள்நெஞ்சில் நிறைந்திட்ட

அமரர்
**சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்**
B. A. (Cey.) S. L. A. S.
கல்வி கலாசார அமைச்சின் பிரதி பிரதம செயலாளர், கிராம அபிவிருத்திப் பணிப்பாளர், மாகாண நிர்வாக பிரதி பிரதம செயலாளர் (வடக்கு - கிழக்கு மாகாணம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ். மாவட்ட
கிராம சேவையாளர் சங்கம்.

யாழ்ப்பாணம். (33993)

---

அமரர்
**சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்**
(B.A. (Cey.) S. L. A. S)

மாகாண நிர்வாக பிரதி பிரதம செயலாளர், கல்வி கலாசார அமைச்சின் பிரதி பிரதம செயலாளர், கிராம அபிவிருத்திப் பணிப்பாளர். (வடக்கு — கிழக்கு மாகாணம்)

அவர்கள் 30 - 11 - 94 ஆம் திகதியன்று கொழும்பில் திடீர் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த துயரத்தையும் அனுதாபத்தையும் அன்னாரின் குடும்பத்தினருக்கும். உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் த்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

பிரதேச செயலர்,
செயலக உத்தியோகத்தர்கள்,
கிராம உத்தியோகத்தர்.
வெளிக்கள உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்,
வலி கிழக்கு,
கோப்பாய். (33992)

---

புங்குடுதீவு
**உயர்திரு சி. சடாட்சரசண்முகதாஸ்**
(B. A. [Cey.] S. L. A. S.)

புங்குடுதிவைச் சேர்ந்தவரும் எமது பாடசாலையின் பழைய மாணவரும், மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு, பிரதம பிரதிச் செயலாளர், உள்துறை அமைச்சு வடக்கு – கிழக்கு மாகாணம், கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருமாகிய உயர்திரு சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ் அவர்கள் 30-11-1994ஆம் திகதி சிவபதமெய்தியதையிட்டு எமது ஆழ்ந்த துயரத்தையும், அனுதாபத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். புங்குடுதிவு ஸ்ரீ சுப்பிரமணிய
மகளிர் வித்தியாலயம்.

புங்குடுதிவு - 1 (33985)

---

வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் மேலதிக செயலாளரும், உள்துறைப் பிரதிச் செயலாளருமான

**உயர்திரு. சி. சடாட்சரசண்முகதாஸ்**
(B.A. Ceylon - S. L. A. S.)

அவர்கள் அமரத்துவம் எய்தியதினையிட்டு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம். அன்னார் வேலணை உதவி அரசாங்க அதிபராகவும், யாழ். செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபராகவும், வடக்கு கிழக்கு மாகாண உள்துறை அமைச்சின் மேலதிக செயலாளராகவும் இருந்து ஆற்றிய மகத்தான சேவையினை நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள், கிராம அலுவலர்கள்,
வெளிக்கள அலுவலர்கள்.

பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்,
திகதி: 02-12-1994.

பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய். (34002)

---

**சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்**
[B.A. (cey) S.L.A.S]

எம் அன்புக்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக விளங்கி, இலங்கை நிர்வாக சேவையினை நன்கு அணி செய்து வந்தவரும், அனைத்து மக்களின், குறிப்பாக ஈழத் தமிழரின் பணியிலே தம்மை முழுமூச்சாக அர்ப்பணித்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய இலட்சியங்களைத் தம் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வந்தவருமாகிய திரு. சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ் B. A. (cey) S. L. A. S 30-11-1994 கொழும்பிலே காலமாகிவிட்டார் என்ற துயரச்செய்தி எம்மை ஆழ்ந்த துக்கக்கடலில் அமிழ்த்தி விட்டது. அவருக்கு எம் கண்ணீர் அஞ்சலிகள். அன்னாருடைய மறைவினால் மிகுந்த கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், மற்றும் அன்பர்களுக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக. அவர்கள் மனத்தேறுதல் அடையவும், மறைந்தவரின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
அன்பர்கள்

2-12-1994 (34005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடிசன் அக்கடமி

யாழ்ப்பாணம் கொக்குவில்

ஆண்டு **9, 10, 11** விஞ்ஞானம்

*யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு*

*வடமராட்சியின் தனித்துவம் மிக்க ஆசிரியரான*

**திரு. N. மகேந்திரன்**

அவர்களின் விஞ்ஞான வகுப்புகள்

ஆரம்பம்: **04-12-94** ஞாயிறு மு.ப **9.30**

(9800)


# யாழ். மாவட்ட மெய்வன்மைத்துறை ஓர் ஆய்வு

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் துறையின் அபிவிருத்திக்காக — யாழ். மாவட்ட மெய்வல்லுநர்களின் கடந்தகால பெறுபேறுகள், அவற்றின் விருத்தி — வீழ்ச்சி, சாதனைகள் ஆகியவை பற்றிய — விரிவான ஆய்வு ஒன்றை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியவரும், உயரம் பாய்தலில் ஆசிய சாதனையை நிலைநாட்டியவருமான **கலாநிதி என். எதிர்வீரசிங்கம்** அவர்கள் மேற்கொள்ளவிருக்கிறார்.

இது தொடர்பாக பின்வரும் ஆவணங்கள் அவருக்கு வேண்டப்படுவதால், அவற்றை வைத்திருப்போர் எமக்கு அவற்றை அனுப்பி வைத்தால் உரிய பகுதிகளை ''போட்டோஸ்ரற்'' பிரதி எடுத்துக் கொண்டு, மூல ஆவணங்களை உடன் திருப்பி அனுப்பி வைப்போம் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1. தாங்கள் அல்லது தங்களது உறவினர்கள் அல்லது நண்பர்கள் முன்னர் மெய்வன்மைத் துறையில் யாழ். மாவட்ட சாதனைகளை நிலைநாட்டியிருந்தால் அல்லது ஸ்ரீலங்கா மட்டத்தில் இடம் எடுத்திருந்தால் அது தொடர்பான சான்றிதழ்கள்.
2. யாழ் மாவட்ட மெய்வன்மைத் துறை பெறுபேறுகள் தொடர்பான பதிவுப் புத்தகங்கள், ஆவணங்கள், பிரசுரமான கட்டுரைகள், மெய்வன்மை போட்டி தொடர்பான வெளியீடுகள்.
3. மெய்வன்மை தொடர்பான சங்கங்களில் நிர்வாக உத்தியோகத்தர்களாக இருந்தோரின் பதிவு அறிக்கைகள், ஆவணங்கள், புத்தகங்கள்.

மேற்படி விவரங்களை வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொண்டு உதவும்படி வேண்டுகிறோம்.

செயலாளர்,
*யாழ். மாவட்ட*
*அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்.*

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம் (சி-9794)


# BITSMANS
## கல்விநிறுவனம்
மானிப்பாய்.

**95** ஆம் கல்வி ஆண்டுக்கான 3 முதல் 11 வரை

வகுப்புகளுக்கான சகல பாடங்களும் எமது வழமையான "Super Grade" ஆசிரிய குழுவினால் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| ✶ விஞ்ஞானம் **J. R.** சூரி *ராஜகோபால்* *சுபா* | ✶ கணிதம் *இரா. அருட்செல்வம்* *கனகசுந்தரம்* *சிவகுமார்* |
| ★ தமிழ் ✶ சமயம் *என். பாலா* *தர்மா* | ✶ சமூ. கல்வியும் வரலாறும் *என். ராஜன்* |
| ✶ ஆங்கிலம் ✶ ஆங்கில - இலக்கியம் தெய்வதவபாலன் **M. A.** ஹரி *கிருபாகரன்* | ✶ வர்த்தகமும் - கணக்கியலும் *என். ராஜன்* ✶ சித்திரம் *எதிர்வீரசிங்கம்* |

ஆரம்பம்: **05-12-1994**
*திங்கள் 1.00 மணி*

புதிய பிரிவு:
**SPOKEN ENGLISH**
By
**M. A.** ஹரி
B. A. Dip-in Eng.

ஆரம்பம்: **23-12-1994**
வெள்ளி காலை 8-00 மணி

*விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்யவும்*

(சி/9798)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மரண அறிவித்தல்கள்

## கதிரமலை கந்தசாமி

*(கிராம உத்தியோகத்தர் - வண். வடக்கு)*

காரைநகர் சிவகாமி அம்பாள் வீதியைப் பிறப்பிடமாக கொண்டவரும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாக கொண்டவரும் ஆகிய கதிரமலை கந்தசாமி அவர்கள் 29 - 11 - 94 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தி. கதிரமலை சவுந்தரம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கமலாம்பிகை (மருந்தாளர் யாழ். போதனா வைத்தியசாலை), அவர்களின் அன்புக் கணவரும், கமலவதனி, திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமாரின் (டென்மார்க்) அன்பு மாமனும், நாகேந்திரம் (உரிமையாளர் மகாலஷ்மி ஸ்ரோர்ஸ் செங்கலடி), ஜெகதீசன் (கிராம உத்தியோகத்தர் சங்கானை கிழக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அம்பலம், ஆ. பாக்கியம் ஆகியோரின் மருமகனும், அ. சதாசிவம், நா. ஜெயலட்சுமி, அ. மதியாபரணம், அம்பலம் மகேஸ்வரி, ஜெ. விமலாதேவி, நவரத்தினம், சதி, லீலாவதி, கருணாகரன், கலாரூபவதி, விநாயகமூர்த்தி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியை அவரது இல்லத்தில் 4 - 12 - 94 ஞாயிற்றுக்கிழமை மு. ப 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
*க. ஜெகதீசன்*
*(சகோதரன்)*

கொக்குவில் மேற்கு. (34011)

## துரையப்பா வீரசிங்கம்

இல. 6/4, ஸ்ரான்லிக்கல்லூரி வீதி, கச்சேரி கிழக்கில் வசிக்கும் துரையப்பா வீரசிங்கம் 2-12-94இல் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம், மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகத்தின் மைத்துனரும், மங்களேஸ்வரி, பாலச்சந்திரன் (சுவிஸ்லாந்து), விமலேஸ்வரி, சந்திரகுமார் (சுவிஸ்லாந்து) ஜெகதீஸ்வரி, உதயகுமார் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத்தந்தையும், நயினாதீவு பரமலிங்கம் மோகனதாஸன் (காந்தி), மேனகா சசிபாலினிதேவி (சுவிஸ்லாந்து), அனுஷா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, பிரியந் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி பூமணி வீரசிங்கம்,**
*(மனைவி).*

*6/4, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,*
*கச்சேரி கிழக்கு.* [33989]

## செல்வி றோகினி சிவசுப்பிரமணியம்

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் இராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வி செல்வி றோகினி காலமானார். இவர் வி. யசோதா(சுவிஸ்), த. கிரிஜா (ஆசிரியை யா/உயரப்புலம் செ. மி. த. க வித்தியாலயம், ஆனைக்கோட்டை), பி. புவிதா(சுவிஸ்), சி. மாலதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயரட்ணம், இ. தயாபரன் வே. பிரபாகரன் ஆகியோரின் மைத்துனியும், வித்தகன் மதீபன் பிரசாத் லக்ஸ்மன் ஆகியோரின் சித்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03-12-94 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**இ. தயாபரன்**

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (33997)

## சங்கரப்பிள்ளை வல்லிபுரம்

*(இளைப்பாறிய P. W D. உதவி ஓவசியர்- புத்தளம்)*

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை வல்லிபுரம் 2- 12- 94 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்ணகைப்பிள்ளையின் அன்புக் கணவரும், கயிலேஸ்வரன் [அதிபர் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை], கருணாகரன் [மருந்தாளர், ஓமான்], மகேந்திரன் (முந்தல்), இந்திரஜோதி, சந்திரஜோதி, மங்களஜோதி, குமரேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், வனிதாதேவி, சோமாவதி (அரசினர் வைத்தியசாலை, புத்தளம்), மல்லிகாதேவி (பொலீஸ் திணைக்களம் சிலாபம்), சிவகோசரி [சரவணாஸ், சாவகச்சேரி], சண்முகநாதன் (ஓமான்), அற்புதநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், சந்திரலதா, நிர்மலன், மனோகரன், நிரஞ்சன, கோபியதுஷினி, சோபனா, அனுஷா, ஜனகன், தேவகி, சஜேந்திரன் ஆகியோரின அன்புப பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (4-12-94) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
வ. கயிலேஸ்வரன்
(மகன்)

*நுணாவில்கிழக்கு,*
*சாவகச்சேரி.* (33999)

## திருமதி அன்னேசம்மா பிலிப்பையா

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னேசம்மா பிலிப்பையா 23- 11- 94 இல் லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பிலிப்பையா ஓவசியரின் அன்புமனைவியும், மாசெல்லா யோசவ், புளோறன்ஸ், திருச்செல்வர், எட்வேட் ரட்ணசிங்கம் (U. K), அல்பிறட் திசநாயகம் (U. K) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
[illegible]
(மருமகன்)

19, 5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். [illegible]

## சிறுவர் இல்ல கண்காட்சி விழா

யாழ்ப்பாணம், டிச.3

அரசடி ஞானசுகுழந்தை இல்லத்தின் சிறுவர் கண்காட்சி விழா நாளை ஞாயிறு முற்பகல் 9 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ஐ)

## இன்று

எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு சம்பந்தமான விசேட கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் யாழ். பணிமனையில் இயக்கத் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் தலைமையில நடைபெறும். (ஒ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச.3

வலயம் ஒன்றைச் சேர்ந்த இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோருக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச.3

யாழ், புனித மரியாள் வித்தியாலய மாணவர்கள் வழங்கும் ஞான சௌந்தரி இசை நாடகம், வித்தியாலய மைதான அரங்கில் இன்று மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது. (அ)

## வை. எம். சி. ஏ. விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். வை. எம். சி. ஏயின் இரண்டாம் கட்ட உள்ளரங்கு விளையாட்டுக்கள் எதிர்வரும் 5ஆம்திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

இதில் டேபிள் டென்னிஸ் கரம், ட்ராவ்ட் ஆகிய ஆட்டங்களில் 13, 15, 17, 19 வயதிற்குக் கீழ்ப் பிரிவுகளிலும் வயதுக் கட்டுப்பாடற்ற பிரிவுக்கும், ஆண், பெண் இரு பாலாருக்குமாக நடைபெறும்.

இப்போட்டிகள் யாவும் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும். [க]

## வித்துடல் மக்கள் அஞ்சலிக்கு

இம்மாதம் முதலாம் திகதி யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்ட லெப். பெரியதம்பி —றெஜினோல்ட் (மரியதாஸ் தர்மகுலதாஸ் ஊர்காவற்றுறை) அவர்களின் வித்துடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஐந்து சந்தி முஸ்லிம் தெருவில் உள்ள தற்போதைய இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு நாவற்குழி லவனிதா குடியிருப்பு அ. த. க. பாடசாலையில் மக்கள் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அங்கிருந்து வித்துடல் மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் தூய விதை குழியில் வித்துடல் விதைக்கப்படும்.

## தொழிலாளர் திடீர் மயக்கம்

பிலியந்தலைப் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் சுமார் 200 தொழிலாளர்கள் திடீரென மயக்கமடைந்ததைத் தொடர்ந்து களுபோவில ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

தொழிற்சாலை நிர்வாகத்தினால் வழங்கப்படும் உணவை நேற்று முன்தினம் இரவு உட்கொண்ட பின்னர் அவர்கள் மயக்கமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ 6)

**பல்கலைக்கழ...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்யுமாறு சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கேட்டுள்ளார்.

வெற்றிடங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு: கலை - 6, முகாமைத்துவம் - 5, வர்த்தகம் - 11, உயிரியல் விஞ்ஞானம் - 15, பௌதிக விஞ்ஞானம் - 47. (அ)

**ஜீ. சி. ஈ....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் மாவிட்டபுரத்துக்கும்— மாற்றப்பட்டுள்ளன.

இம்மாற்றங்கள் அனுசரித்து பரீட்சைக்குத் தோற்றுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-152)


# தென்னிந்திய திருச்சபை
யாழ். அத்தியட்சாதீனம்

கீழைத்தேய, மேலைத்தேய இசைக்குழுவினர் *வழங்கும்*

## கிறிஸ்து பிறப்பு இசை வழிபாடு
## CHRISTMAS CAROLS

*காலம்:* 04 — 12 — 1994 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு
*இடம்:* மேயல் தம்பையா மண்டபம் வேம்படி மகளிர் கல்லூரி

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்

திரு. ஜி. இராஜநாயகம்,
*அமைப்பாளர்.*

*ஆதீனக் காரியாலயம்,*
*வட்டுக்கோட்டை.* [சி-9719]


# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)*

பிறவுண் வீதி நீராவியடியைச் சேர்ந்த வை. சுப்பிரமணியம் காலமானார்.

இவர் பாஞ்சாலிதேவியின் (கிளி) அன்புக் கணவரும், கல்யாணசுந்தரம் (லண்டன்), அசோகராஜன் (லண்டன்), பங்கயவதனி (ஆஸ்திரேலியா), மகிந்தன் (கொழும்பு),ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜனகா, டோணி, விக்னராஜா, உமாராணி ஆகியோரின் மாமனாரும், கீத், ஆரணி, ஹரிசன், யாதவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (04-12-94) பிற்பகல் 3-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கிளி
*(மனைவி)*

*87, பிறவுண் வீதி,*
*நீராவியடி.* (34010)

## திருமதி வனசமலர் சண்முகநாதன்

திருமதி வனசமலர் சண்முகநாதன் காலமானார்.

அன்னார் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், உரும்பராயைச் சேர்ந்த குமாரசுவாமி - அன்னலஷ்மி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி - திருமதி நல்லம்மாவின் அன்பு மருமகளும், பிறமிளா (கனடா), சகிலா (வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி), நிகிலா (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் - ஆங்கிலம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாலிங்கத்தின் (மகான்) அன்பு மைத்துனியும், கணேஸ்வரனின் (கனடா) அன்பு மாமியாரும், கௌதத்தின் (கனடா) அன்பு அம்மம்மாவும், கருணாதேவி, ஜெயமலர், ஜெயந்தி (கனடா), பிரேமா (நோர்வே), மஞ்சுளா (கனடா), மிதிலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
*ந. மகாலிங்கம் (மகான்)*
*(மைத்துனர்)*

10/2, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி. (34004)

## மாணிக்கம் சண்முகராஜா

*(அகஸ்தியர் வைத்தியசாலை உரிமையாளர்)*

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சண்முகராஜா 1.12.94 ல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்;
சசிதரன்

*மூத்தவிநாயகர் கோயிலடி,*
*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.* (34006)

## மருதப்பு சண்முகம்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சொர்ணவடலி கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட முன்னாள் பொரளை யாழ். போசனசாலை உரிமையாளருமான மருதப்பு சண்முகம் 30 - 11 - 94 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் தையல்நாயகியின் அன்புக் கணவரும், மருதப்பு - விசாலாட்சியின் அன்பு மகனும், விஸ்வலிங்கம் சின்னத்தங்கத்தின் அன்பு மருமகனும், மீனகுமாரி (லண்டன்), சூரியகுமார் (பிரான்ஸ்), சிறீஸ்குமார் (பிரான்ஸ்), இரவீந்திரகுமார் [பிரான்ஸ்], விஜயகுமாரி [இறம்பைக்குளம் வவுனியா], விஜயகுமார் (லண்டன்), ஜெயா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புண்ணியலிங்கம் (லண்டன்), அணிமொழி (பிரான்ஸ்), சித்திராதேவி (பிரான்ஸ்), பேபி (பிரான்ஸ்), செல்வகுமார் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜா, அர்ஜுன், நிருதன், பவித்திரன், சஞ்சீவ், திவாகரன், ஜெயகரன், ஜெயகௌரி ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் வவுனியா இறம்பைக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பு. செல்வகுமார் (செல்வன்)*
*[மருமகன்]*

*அலைகரை வீதி,*
*இறம்பைக்குளம்,*
*வவுனியா.* (34008)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org